**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 , திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> : திரு.S.கோவேந்தன், B.A., LL.B., (Hons).,**

நீதித்துறை நடுவர் எண்.2,

திருப்பத்தூர்.

2026–ம் ஆண்டு ஜீன் மாதம் 10–ஆம் நாள் புதன்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.270/2023</u>**

**<u>CNR.No.TNTU02–012581–2023</u>**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
கந்திலி காவல் நிலையம்,
திருப்பத்தூர்.
குற்ற எண்.32/2021 ..... புகார்தாரர்

//எதிரிடை//

கிருஷ்ணமூர்த்தி, த/பெ.சேட்டு .....குற்றஞ்சாட்டப்பட்டவர்

(குற்றம்சாட்டப்பட்டவர் வழக்கறிஞர் மூலம் வழக்கை எதிர்கொண்டார்)

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சி.சி. எண்.270/2023 |
| 2 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | கந்திலி காவல் நிலையம்,<br>குற்ற எண்.32/2021 |
| 3 | குற்றம் சாட்டப்பட்டது | இ.த.ச.பிரிவு.379 |
| 4 | குற்றம் வனையப்பட்டது | இ.த.ச.பிரிவு.379 |
| | குற்றம் சாட்டப்பட்டவரின் விவரம் | |
| 5 | பெயர் மற்றும் தந்தை பெயர் | கிருஷ்ணமூர்த்தி, த/பெ.சேட்டு |
| 6 | தொழில் | –– |
| 7 | முகவரி | நத்தமேடு கிராமம், மோட்டாங்குறிச்சி அஞ்சல், தர்மபுரி |
| | நாள் | |
| 8 | குற்ற நிகழ்வு | 07.02.2021 |



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

<table>
<tr><td>9</td><td>புகார்</td><td colspan="3">09.02.2021</td></tr>
<tr><td>10</td><td>கைது செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">16.09.2022</td></tr>
<tr><td>11</td><td>எதிரி பிணையில் வந்த நாள்</td><td colspan="3">03.10.2022</td></tr>
<tr><td>12</td><td>வழக்கு துவங்கிய நாள்</td><td colspan="3">05.05.2025</td></tr>
<tr><td>3</td><td>விசாரணை முடிக்கப்பட்ட நாள்</td><td colspan="3">26.05.2026</td></tr>
<tr><td>14</td><td>தீர்ப்பு</td><td colspan="3">10.06.2026</td></tr>
<tr><td>15</td><td>தாமதக் காரணம்</td><td colspan="3">--</td></tr>
<tr><td colspan="5">வழக்கின் நிலை</td></tr>
<tr><td>16</td><td>பிணைக்காலம்</td><td colspan="3">--</td></tr>
<tr><td>17</td><td>குற்ற இறுதி தாக்கல் செய்த நாள்</td><td colspan="3">20.09.2022</td></tr>
<tr><td>18</td><td>பிரிவு 240 கு.வி.ந.மு.ச.<br>முதல் கேள்வி</td><td colspan="3">04.11.2023</td></tr>
<tr><td>19</td><td>பல்வகை மனுவின் மீது இந்நீதிமன்றத்தின் உத்திரவு</td><td colspan="3">--</td></tr>
<tr><td rowspan="9">20</td><td rowspan="9">முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை</td><td>அரசு தரப்பு சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா. 1</td><td>05.05.2025</td><td>05.05.2025</td></tr>
<tr><td>அ.சா. 2</td><td>05.05.2025</td><td>05.05.2025</td></tr>
<tr><td>அ.சா. 3</td><td>05.05.2025</td><td>05.05.2025</td></tr>
<tr><td>அ.சா. 4</td><td>05.05.2025</td><td>05.05.2025</td></tr>
<tr><td>அ.சா. 5</td><td>29.04.2026</td><td>29.04.2026</td></tr>
<tr><td>அ.சா. 6</td><td>29.04.2026</td><td>29.04.2026</td></tr>
<tr><td>அ.சா. 7</td><td>07.05.2026</td><td>07.05.2026</td></tr>
<tr><td>அ.சா. 8</td><td>07.05.2026</td><td>07.05.2026</td></tr>
</table>

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

| | | |
|---|---|---|
| 21 | பிரிவு 313 கு.ந.மு.வி.(வினாவல்) | 12.05.2026 |
| 22 | தலைமறைவு எதிரியின் விவரங்கள்/ அவரது ஆஜர்/ஒப்படைப்பு | இல்லை |
| 23 | மேலமை நீதிமன்றங்களால் பிறப்பிக்கபட்ட நிறுத்திவைப்பு உத்தரவு ஏதேனும் | இல்லை |

இந்த வழக்கு 16.08.2023 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 26.05.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்ற முறையிடுபவர் தரப்பில் உதவி அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–II அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் P.S.உமாவதி B.A., B.L., அவர்களும் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்தும் இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும் சான்றாவணங்களையும் சாட்சியங்களையும் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## <u>தீர்ப்புரை</u>

**<u>குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:</u>**

**(1).** இவ்வழக்கில் கடந்த 07.02.2021–ஆம் தேதி காலை 11.00 மணி முதல் 08.02.2021–ம் தேதி விடிற்காலை 04.00 மணிக்குள் கந்திலி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கந்திலி SSA – ஏஜென்சீஸ் பெட்ரோல் பங்கில், புகார்தாரர் சத்தியராஜ் என்பவர் தனது TN 83 R 5463 என்ற பதிவு எண் கொண்ட Honda Dio என்ற இருசக்கர வாகனத்தை பங்கில் நிறுத்தி வைத்திருந்ததை எதிரி கிருஷ்ணமூர்த்தி தன் சுயலாபத்திற்கு இருசக்கரவாகனத்தைத் திருடிச்சென்றுள்ளார். எதிரி மீது இ.த.ச.பிரிவு.379–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(2).** இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் கோப்புக்கு எடுத்துக்கொண்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி எதிரிகள் ஆஜரானவுடன் நகல்கள்



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

வழங்கப்பட்டு, குற்றச்சாட்டு வனையப்பட்டு எதிரிகளிடம் வினவியபோது எதிரிகள் அதை மறுத்ததால் அரசு தரப்பில் சாட்சிகளை முன்னிலைப்படுத்த இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

**(3).** அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.8** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.15** வரையிலான சான்றாவணங்களும், வழக்கிற்கு ஆதாரமாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**(4).** அரசு தரப்பு சாட்சியங்கள் முடிவுற்ற பிறகு, சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு எதிராக உள்ள சாட்சியங்கள் குறித்து Cr.P.C பிரிவு. 313(1)(b)–ன் கீழ் வினவியபோது எதிரி "பொய் சாட்சியம்" என்றும், அவர் தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

**<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

**(5).** அ.சா.1 திரு.சத்தியராஜ் தனக்குச் சொந்தமான இருசக்கர வாகனம் காணாமல் போனது குறித்து கந்திலி காவல் நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில் அ.சா.7 காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.வசந்தகுமார் கந்திலி காவல் நிலையக் குற்ற எண்.32/2021, இ.த.ச. பிரிவு 379–ன் கீழ் (அ.சா.ஆ.11) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதற்கட்ட விசாரணை செய்ததை, மேற்கொண்டு காவல் உதவி ஆய்வாளர் அ.சா.8 திரு.கணேசன் புலன் விசாரணை செய்து, இறுதிகட்ட புலன் விசாரணையை முடித்து, சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் எதிரி மீது இ.த.ச.பிரிவு.379–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

**<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு.379–ன் கீழான குற்றச்சாட்டு சம்பவத்தை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்.</u>**

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**(6)** கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதால் அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால் அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**(i) வழக்கின் பொருண்மை மற்றும் சாட்சியங்களின் மதிப்பீடு :**

**(7)** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் வாயிலாக இக்குற்றச் சம்பவத்தில் எதிரியின் ஈடுபாடு மற்றும் குற்றச்சாட்டின் சாராம்சங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளது.

**(ii) புகார்தாரர் அ.சா.1 இன் சாட்சியத்தை பொருத்தமட்டில்,**

**(8)** தனது சாட்சியத்தில், கடந்த 07.02.2021 அன்று மாலை சுமார் 06.30 மணியளவில் SSA Bharath Petrol Bunk–ல் தான் தன்னுடைய வண்டியை நிறுத்தி விட்டு இரவு சுமார் 11.00 மணியளவில் தான் பெட்ரோல் பங்கில் தூங்கிவிட்டு 08.02.2021 அன்று அதிகாலை சுமார் 04.00 மணியளவில் எழுந்து பார்த்தபோது தன்னுடைய TN 83 R 5463 என்ற பதிவெண் கொண்ட Hero Dio வண்டியை காணாததால், பெட்ரோல் பங்கில் உள்ள சிசிடிவி கேமிராவை Check செய்து பார்த்தபோது, 2 பேர் வண்டியை எடுத்துச் சென்றதாக தெரிய வந்ததால், 09.02.2021 அன்று கந்திலி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், சுமார் 1 1/2 வருடங்கள் கழித்து சேலத்திலிருந்து போலீசார் தன்னுடைய வண்டி கிடைத்து விட்டது என்று தன்னை போன் மூலம் தொடர்பு கொண்டதால், தான் காவல் நிலைய போலீசார் ஒருவருடன் ஒசூருக்குச் சென்று தன்னுடைய வாகனத்தை கந்திலி காவல் நிலையத்திற்கு எடுத்து வந்து கனம் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து தன்னுடைய வாகனத்தை பெற்றுக்கொண்டதாகவும்,



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

தன்னுடைய வண்டியை திருடிய கிருஷ்ணமூர்த்தி என்ற நபரை கந்திலி காவல் நிலையத்தில் வைத்து தனக்கு போலீசார் அடையாளம் காட்டியதாகவும், கனம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிதான் தனது வாகனத்தைத் திருடிய நபர் என்று சாட்சியம் அளித்துள்ளார். இவரின் மூலம் புகார் அ.சா.ஆ.1–ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**(9)** அ.சா.1–ன் புகாரைப் பரிசீலிக்கும்போது, மேற்படி வாகனமானது 07.02.2021 அன்று திருடு போயிருக்க, புகாரானது 09.02.2021 அன்று கொடுக்கப்பபட்டிருப்பதற்கான இரண்டு நாட்கள் காலதாமதம் குறித்து அரசு தரப்பில் எந்தவித காரணமும் அளிக்கப்படவில்லை என்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

**(10)** அ.சா.–1ன் சாட்சியத்தில் இருந்து மேற்படி திருட்டு சம்பவத்தின்போது, அவர் எதிரியை நேரடியாகப் பார்த்ததாக அறியமுடியவில்லை. அவர் காவல் நிலையத்தில் வைத்து பார்த்ததாகக் கூறியுள்ளதால், எதிரியின் அடையாளம் குறித்து இவரது சாட்சியம் ஏற்கும்படியாக இல்லை.

**(11)** எனவே, இவ்வழக்கானது சூழ்நிலை சாட்சியங்களின் அடிப்படையிலேயே அமைந்துள்ளதாக கருத முடிகிறது.

*"**In State of Uttar Pradesh vs. Dr.R.P.Mittal (1992 3 SCC 300)**, the essential ingredients to prove the guilt by circumstantial evidence were spelt by the **Hon'ble Supreme Court of India** as follows:*

*i. Circumstances from which conclusion is drawn should be fully proved.*
*ii. Circumstances should be conclusive.*
*iii. All facts so established should be consistent only with the hypothesis of guilt and inconsistent with innocence of the accused.*
*iv. Circumstances should exclude the possibility of guilt of a person other than the accused."*

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**(12)** எனவே, இதன் அடிப்படையில், இந்நீதிமன்றம் ஆனது அரசு தரப்பு அதன் சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரி தான் குற்றவாளி என்பதை சூழ்நிலை சாட்சிகளின் அடிப்படையில் நிரூபித்துள்ளதா என்பதை ஆராய வேண்டி உள்ளது.

இந்திய சாட்சிய சட்டம் 1872–ல்,

"*27.* ***How much of information received from accused may be proved.*** *Provided that, when any fact is deposed to as discovered inconsequence of information received from a person accused of any offence, in the custody of a police-officer, so much of such information, whether it amounts to a confession or not, as relates distinctly to the fact thereby discovered, may be proved*" என்று குறிப்பிடப்பட்டுள்ளதால்,

**(13)** மேற்படி சட்டப்பிரிவின்படி, காவல்துறையினரிடம் சாட்சிகளின் முன்னிலையில் எதிரிகள் தன்னிச்சையாக அளிக்கின்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டும், அதன் அடிப்படையில் குற்ற சம்பவத்திற்கு தொடர்புடைய புலன் விசாரணையில் இதுவரையில் கண்டிராத புதிய செய்தியோ அல்லது பொருளோ சாட்சிகளின் முன்னிலையில் கண்டறியப்பட்டு இருக்க வேண்டும்.

**(14)** மேற்படி திருட்டு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லாத காரணத்தினால், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளின் சாட்சியம் முக்கியத்துவம் பெருகின்றது.

**(iii) இவ்வழக்கின் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான அ.சா.5 மற்றும் அ.சா.6–ன் சாட்சியங்களைப் பரிசீலிக்கையில்,**

**(15)** அ.சா.5 திரு.கிருஷ்ணப்பா, தனது சாட்சியத்தில் கடந்த 22.08.2022 அன்று 12.00 மணிக்கு தான் ஜீஜீவாடி கிராம நிர்வாக அலுவலகத்தில் பணியிலிருந்தபோது, காவல் உதவி ஆய்வாளர் எதிரியை விசாரிக்க



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

தன்னை சாட்சியாக இருக்கும்படி, கோவிந்த அக்ரஹாரம் சர்கில் என்ற இடத்திற்கு வரும்படி அழைத்ததின் பேரில் அங்கு சென்றபோது, எதிரியானவர் தனது பெயர் கிருஷ்ணமூர்த்தி என்றும், விஜய் மற்றும் அருண் ஆகியோர் தன்னிடம் இருசக்கர வாகனத்தை எடுத்து வந்து விற்பார்கள் என்றும், மேற்படி நபர்கள் சம்பவ இடத்தில் இருந்து Honda Dio வாகனத்தை திருடிவந்ததாக கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும், திருடிய வாகனங்களை சரஸ்வதி லே அவுட்டின் பின்புறம் மறைத்து வைத்திருப்பதாகக்கூறியதன் பேரில், மேற்படி வழக்குச் சொத்தை கைப்பற்றி, தன்னிடம் (அ.சா.ஆ.14) கைப்பற்றுதல் மகஜரில் (1–வது சாட்சி கையொப்பம் – அ.சா.ஆ.9) சாட்சி கையொப்பம் பெற்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**(16)** எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில், எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அருண் மற்றும் விஜய் ஆகியோரிடமிருந்து, எதிரி வாகனங்களை விலைக்கு வாங்கியதாகத்தான் கூறியுள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே இவரது சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்குப் பலனளிக்கும் வகையில் இல்லை.

**(17)** அ.சா.6 திரு.சீனப்பா தனது முதல் விசாரணையில், 28.08.2022 அன்று தன்னையும், கிருஷ்ணப்பா என்பவரையும் ஆஜர் எதிரியை இருசக்கர வாகனம் திருடியது சம்மந்தமாக விசாரிக்க சாட்சியாக இருக்கும்படி கூறியதாகவும், எதிரியை விசாரித்தபோது திருடிய வாகனங்களை செங்கல்பேட்டை காம்பவுண்டிடம் மறைத்து வைத்திருப்பதாக கூறினார் என்றும், வாகனத்தை மகசரில் கைப்பற்றியபோது, தான் சாட்சிக் கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**(18)** எதிரி தரப்பு குறுக்குவிசாரணையில், எதிரி அளித்த வாக்குமூலத்தில் அருண் மற்றும் விஜய் ஆகியோரிடமிருந்து வழக்குச்சொத்தை திருடி எடுத்து வந்ததாக அவர் கூறியதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை கண்ணுற்றபோது, மேற்படி சங்கதியானது அறியப்படவில்லை. எனவே, ஒப்புதல் வாக்குமூல மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகியோர் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**(19)** அரசு தரப்பு வழக்கின் பொருண்மையின்படி எதிரிக்கு எதிராக இ.த.ச.பிரிவு.411-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டிருக்க வேண்டும்.

**(20)** மேலும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையிலான வழக்குச் சொத்து கைப்பற்றப்படுவதற்குக் குறைந்த சாட்சிய மதிப்பு என்பதால், அதை வைத்து மட்டுமே எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாகக் கருத முடியாது. ஒப்புதல் வாக்குமூல மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளும் ஒருவருக்கொருவர் முரண்படும் விதமாக சாட்சியம் அளித்துள்ளதாகக் தெரியவருகிறது. எதிரியையும் குற்ற சம்பவத்தையும் இணைக்கும் பிற சூழ்நிலைகளும், அரசு தரப்பு சாட்சியங்களின் வாயிலாக அறியமுடியவில்லை.

**(21)** ஆனால், புகார்தாரர் தனது வாகனத்தை இரண்டு நபர்கள் திருடிச்சென்றதாகத்தான் C.C.TV Camera-வில் கண்டதாக தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். அ.சா.1-ம் தனது சாட்சியத்தில் எதிரியைத் தான் காவல்நிலையத்தில வைத்துப் பார்த்ததாகவே சாட்சியம் அளித்துள்ளார். எனவே, மேற்படி வழக்குச் சொத்து கைப்பற்றப்பட்டதை உறுதியூட்டும் விதமாக எந்த சூழ்நிலைகளும் அரசு தரப்பு சாட்சிகளின் வாயிலாக முன்னிறுத்தப்படவில்லை.

KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**<u>(v). இவ்வழக்கின் புலன் விசாரணை குறித்து பரிசீலிக்கையில்,</u>**

**(22)**. இவ்வழக்கில் முதற்கட்ட விசாரணை செய்த அ.சா.7 சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.வசந்தகுமார் அ.சா.1–னிடம் (அ.சா.ஆ.1) புகாரினைப் பெற்று, (அ.சா.ஆ.11) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, (அ.சா.ஆ.12) பார்வை மகஜர், (அ.சா.ஆ.13) மாதிரி வரைபடம் தயார் செய்து, பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் இவ்வழக்கை மேற்கொண்டு புலன் விசாரணை செய்வதற்காக, ஒப்படைத்தது குறித்தும்,

**(23)** மேற்படி வழக்குக்கோப்பைப் பெற்றுக்கொண்ட அ.சா.8 காவல் உதவி ஆய்வாளர் திரு.கணேசன், (அ.சா.ஆ.14) கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலசாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது, வழக்குச்சொத்தை (அ.சா.ஆ.15) படிவம் 91 மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தது குறித்தும், இவ்வழக்கின் எதிரியை கைது செய்து நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தியது மற்றும் தனது புலன்விசாரணையை முடித்து எதிரி இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளனர்.

**(24)** அ.சா.8 தனது குறுக்கு விசாரணையில், எதிரி அளித்துள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் களவு செய்ததாக கூறவில்லை என்றும், ஆனால் எதிரி தான் வாகனத்தை ஆஜர் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், கைப்பற்றப்பட்ட வாகனங்கள் பதிவு எண் இல்லாத வாகனங்கள் என்றும், இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்த வாகனத்தின் எண் எழுதப்பட்டுள்ள படிவம்–91–ல் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும் அலட்சியமாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.8–ன் சாட்சியமானது இவ்வழக்கின் புலன் விசாரணை குறித்த குளறுபடிகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

(25) மேலும், எதிரி அளித்துள்ள ஒப்புதல் வாக்குமூலத்திற்கு சாட்சிகளாக இருந்த அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகியோர் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்குச்சொத்தை தங்களது சாட்சியங்களில் சான்றுப்பொருளாக அடையாளம் காட்டவில்லை என்பது அரசு தரப்பு வழக்கில் கூடுதல் ஐயத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

**(v) இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 மற்றும் அ.சா.4–ன் சாட்சியங்களைப் பரிசீலிக்கையில்,**

(26) இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.3 திரு.ராஜன் மற்றும் அ.சா.4 சரவணன் ஆகியோர் இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சிகளாக மட்டுமே இருப்பதால், இவர்களது சாட்சியத்தின் மூலம் எதிரியானவர் மேற்படி குற்றச்சம்பவத்தில் ஈடுபட்டதாக நிரூபிக்க இயலவில்லை.

(27) புலன் விசாரணையில் மேற்படி குளறுபடிகள் அமைந்திருக்க, இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 தனது சாட்சியத்தில், தனது வாகனத்த இரண்டு நபர்கள் திருடிச்சென்றதை தான் CC.TV.Camera –வில் பார்த்ததாகக் கூறியுள்ளபோது, குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட உண்மையான நபர்கள் கிடைக்காத காரணத்தினால் எதிரியையும், குற்ற சம்பவத்தையும் இணைக்கும் பிற சூழ்நிலைகள் ஏதும் இல்லாமல் இருக்க, எதிரி மேற்படி இரண்டு நபர்களிடமிருந்து திருட்டு வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனத்தினை விற்பதற்காக பெற்றதாக அவர் அளித்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்குச் சொத்து இருசக்கர வாகனம் கைப்பற்றப்பட்டதை மட்டுமே வைத்து எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாகக் கருதமுடியாது என்று எதிரி தரப்பில் வாதிடப்பட்டது ஏற்கும்படியாக உள்ளதென இந்நீதிமன்றம் கருதுகிறது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**(28).** இவ்வழக்கின் சாட்சியங்களையும், ஆவணங்களையும் ஆராயும்போது, எதிரி இக்குற்றசம்பவத்தில் ஈடுபட்டதையும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களையும், அரசு தரப்பு சாட்சிகள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பானது நிரூபணம் செய்யவில்லை.

**(29)** இவ்வழக்கானது சூழ்நிலை சாட்சியங்களின் அடிப்படையில் அமைந்துள்ளபோது, எதிரியையும் இந்த குற்ற சம்பவத்தையும் இணைக்கும் சங்கிலி தொடரை, அரசு தரப்பில் முழுமையாக இணைக்க முடியவில்லை. எனவே, அரசு தரப்பு வழக்கில் எழும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>முடிவாக,</u>**

**(30)** எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு.379–ன் கீழான குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படாததால், எதிரியை மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்ப்பளித்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1)–இன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**(31)** எதிரி எழுதிக் கொடுத்திருக்கின்ற பிணைமுறி ஆவணத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

**<u>(vi) வழக்கு சொத்து குறித்த உத்தரவு</u>**

**(32)** இவ்வழக்கில் 19.09.2022 தேதியிட்ட CrlMP.No.8679/2022–ன் உத்தரவு மூலம் இவ்வழக்கின் புகார்தாரருக்கு இடைக்காலப் பொறுப்பில் அளிக்கப்பட்ட C.P.No.234/2022–ல் கண்ட வழக்கு சொத்தான பதிவு எண்.TN 83 R 5463 கொண்ட இருச்சக்கர வாகனமானது, புகார்தாரரின் நிரந்தர பொறுப்பில் இருக்கும்படி உத்தரவிடப்படுகிறது. புகார்தாரர் மற்றும் ஜாமீன்தாரர்களால் அளிக்கப்பட்ட பத்திரங்கள் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்குச் சொல்லச் சொல்ல அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு ஜீன் திங்கள் 10–ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**திருப்பத்தூர்.**

**அரசு தரப்பு சாட்சிகள் :**

| அரசு தரப்பு சாட்சிகள் | சாட்சியின் பெயர் | சாட்சியின் வகை |
|---|---|---|
| அ.சா.1 | திரு.சத்தியராஜ், த/பெ.தேவன் | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.விஜய், த/பெ.முத்துராமன் | கேள்விப்பட்ட சாட்சி |
| அ.சா.3 | திரு.ராஜன், த/பெ. முனிசேகரப்பா | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.4 | திரு.சரவணன், த/பெ. சின்னத்தம்பி | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.5 | திரு.கிருஷ்ணப்பா, த/பெ.முனிநஞ்சப்பா | ஒப்புதல் வாக்குமூல மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| அ.சா.6 | திரு.சீனப்பா, த/பெ.கஞ்சப்பா | ஒப்புதல் வாக்குமூல மற்றும் கைப்பற்றுதல் சாட்சி |
| அ.சா.7 | திரு.வசந்தகுமார், த/பெ. கோவிந்தராஜ் | முதற்கட்ட புலன் விசாரணை அதிகாரி |
| அ.சா.8 | திரு.கணேசன், த/பெ. மணி | இறுதியறிக்கை தாக்கல் செய்த புலன் விசாரணை அதிகாரி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| **சான்றாவண எண்.** | **சான்றாவணத்தின் வகை** | **சான்றளித்தவர்/ மெய்ப்பித்தவர்** |
|---|---|---|
| **அ.சா.ஆ.1** | புகார் | அ.சா.1 |
| **அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.5** | இவ்வழக்கு வாகனத்தின் 1 முதல் 4 புகைப்படங்கள் | அ.சா.1 |
| **அ.சா.ஆ.6** | பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் | அ.சா.3 |
| **அ.சா.ஆ.7** | பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் | அ.சா.4 |
| **அ.சா.ஆ.8** | எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.5 |
| **அ.சா.ஆ.9** | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1-வது கையொப்பம் | அ.சா.5 |
| **அ.சா.ஆ.10** | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் | அ.சா.6 |
| **அ.சா.ஆ.11** | முதல் தகவல் அறிக்கை | அ.சா.7 |
| **அ.சா.ஆ.12** | பார்வை மகஜர் | அ.சா.7 |
| **அ.சா.ஆ.13** | மாதிரி வரைபடம் | அ.சா.7 |
| **அ.சா.ஆ.14** | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.8 |
| **அ.சா.ஆ.15** | படிவம் - 91 | அ.சா.8 |

**<u>அரசு தரப்பு சான்று பொருள் - இல்லை</u>**

**<u>எதிரி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள்</u> - இல்லை**

**<u>எதிரி தரப்பு சான்று பொருள் -</u> இல்லை**

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**திருப்பத்தூர்.**

**<u>பின்குறிப்பு</u>**

1. எந்த சாட்சியும் 3 கேட்புரைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. நீதிமன்ற விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
3. வழக்கு முடிவு குறித்து சம்பந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
4. வழக்குச் சொத்து பற்றிய உத்தரவு வழக்குச் சொத்துக்கள் பதிவேட்டில் பதிய உத்தரவிடப்பட்டது.

**// உண்மை நகல்//**

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**திருப்பத்தூர்.**